**செய்தி வெளியீடு எண்: 745** REVISED **நாள்: 12.12.2011**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (12.12.2011) தலைமைச் செயலகத்தில், சென்னையில் நடைபெறவுள்ள 9-வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவின் செலவினங்களுக்காக தமிழக அரசின் சார்பில் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை இந்திய திரைப்படத் திறனாய்வுக் கழக இயக்குநர் திரு. தங்கராஜ் அவர்களிடம் வழங்கினார்கள்.

இந்திய திரைப்படத் திறனாய்வுக் கழகம் (Indo Cine Appreciation Foundation) தரமான, அர்த்தமுள்ள திரைப்படங்களை ஆண்டு முழுவதும் திரையிட்டு காட்டும் திரைப்பட சங்கமாக செயல்பட்டு வருவதுடன் 2003–ஆம் ஆண்டிலிருந்து கடந்த 8 ஆண்டுகளாக “சென்னை சர்வதேச திரைப்பட விழா” என்னும் பெயரில் டிசம்பர் மாதத்தில் திரைப்பட விழா நடத்தி வருகிறது. இதேபோன்று இந்த ஆண்டும் 9வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழா டிசம்பர் திங்கள் 14 முதல் 22 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விழாவில் 140 திரைப்படங்கள் 9 நாட்களில் 5 திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2005–ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த போது 3–வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழா சிறப்பாக நடைபெற 2 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய்க்கு தமிழக அரசின் மூலம் விளம்பரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நடைபெறும் 9–வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு நிதியுதவி அளித்திட இந்திய திரைப்படத் திறனாய்வுக் கழகம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை கேட்டுக் கொண்டது.

இக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று சென்னையில் நடைபெறவுள்ள 9-வது சர்வதேச திரைப்பட விழாவின் செலவினங்களுக்காக தமிழக அரசின் சார்பில் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை இந்திய திரைப்படத் திறனாய்வுக் கழக இயக்குநர் திரு. தங்கராஜ் அவர்களிடம் வழங்கினார்கள்.

அப்போது, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவரும், திரைப்பட நடிகருமான திரு. R.சரத்குமார், எம்.எல்.ஏ. அவர்களும், திரைப்பட நடிகை திருமதி சுஹாசினி மணிரத்னம், இந்திய திரைப்பட திறனாய்வுக் கழக இயக்குநர் திரு. தங்கராஜ், திரைப்பட நடிகை லிசி பிரியதர்ஷன் ஆகியோர் சந்தித்து 9-வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவினை தலைமையேற்று நடத்தித் தர வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கேட்டுக் கொண்டதுடன், 9-வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவின் செலவினங்களுக்காக நிதியுதவி வழங்கியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.